# அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

**"சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்"**

# ஆய்வடங்கல்

**ISC**
**2016**

பெப்ரவரி - 12,13,14 - 2016

இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

திரு. ப. கணேசலிங்கம்

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புக்கூறல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# திருமந்திரம் புலப்படுத்தும் சமூக நல்லிணக்க, நல்லொழுக்க சிந்தனைகளும் சமகால சமுதாய போக்குகளும் - ஓர் ஒப்பீட்டாய்வு

பொ. பூலோகநாதன்

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வுக் கட்டுரையானது திருமூலரால் அருளப்பட்ட மூவாயிரம் பாடல்களைக் கொண்ட பெரும் தொகுதியான திருமந்திரம் வலியுறுத்தும் சமூக நல்லிணக்க, நல்லொழுக்க சிந்தனைகளை இன்றைய சமுதாய போக்குகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதாக அமைகின்றது. இன்றைய உம் நூற்றாண்டானது பொருளாதாரம், கல்வி, தொழிநுட்பம், அரசியல் போன்ற துறைகளிலே முன்னேற்றம் கண்டிருப்பினும் சமூகங்களிடையே நல்லிணக்கத்தினையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்துவதில் முன்னேற்றம் காணவில்லையென்றே குறிப்பிட முடியும். மாறாக சமூகங்களிடையே பிரிவினைகளும் ஏற்றத்தாழ்வுகளும் பகைமைகளும் வன்முறைகளுமே அதிகரித்துச் செல்கின்றன. இதன் விளைவாக உலக நாடுகளுக்கிடையே கொடிய யுத்தம், செயற்கை அழிவுகள், பசி, பஞ்சம், பட்டினி போன்றன நிகழ்கின்றன. சமூகங்களிடையே நல்லிணக்க, நல்லொழுக்கங்களை நிலைநாட்டுவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல அமைப்புக்கள் தோன்றியிருப்பினும் சமூகங்களிடையே நல்லிணக்கம் ஏற்படவில்லை என்பதனை இன்றைய உலகலாவிய போக்குகள் எமக்கு வெளிப்படுத்துகின்றன. இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் எனும் சித்தர் 3000 ஆண்டுகள் தியானத்தினூடாக அனுபவித்த விடயங்களை ஒன்று திரட்டி 3000 மந்திரங்களைக் கொண்ட திருமந்திரத்தை அருளிச் செய்தார். திருமுறைகளில் 10ம் திருமுறையாகவும் மூலமந்திரமாகவும் தமிழ் மூவாயிரமாகவும் போற்றப்படும் இது ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுவையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு தேவையான இன்றைய ஒழுக்க நெறிகளை வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக சமூக, சமய ஒற்றுமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர் மனை நயவாமை, செல்வம் நிலையாமை, வாழ்க்கை நிலையாமை, அறம் செய்வோர் திறம், அறம் செய்யார் திறம், அன்புடைமை, பொதுமகளீர் இழிவு, பற்றறுத்தலின் பெருமை, பொய்யுரைத்தலை தவிர்த்தல் போன்ற அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. திருமந்திரப் பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் நல்லிணக்க நல்லொழுக்க சிந்தனைகளை இன்றைய சமுதாய போக்குகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்காக பல திருமந்திர உரை நூல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டும் சம கால செல்நெறியுடன் ஒப்பிட்டும் இக் கட்டுரை வடிவமைக்கப்படுகிறது.

**திறவுசொற்கள் :** : நல்லொழுக்கம், நல்லிணக்கம், அறம், நிலையாமை, தந்திரங்கள்

**ஆய்வு அறிமுகம்.**

திருமுறைகள் பனிரெண்டாகும். இவை தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் எனும் நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 1-9 வரையிலான திருமுறைகள் தோத்திர வகைக்குரியதாகவும், 10ம் திருமுறை சாத்திர வகைக்குரியதாகவும். 11ம் திருமுறை பிரபந்த வகைக்குரியதாகவும், 12ம்திருமுறை புராண வகைக்குரிய தாகவும் வகுக்கப்பட்டுள்ளது. 10ம் திருமுறையாகவும், சாத்திர வகைக்குரிய தாகவும், தமிழ் மூவாயிரம் என்றும் போற்றப்படுவதும் திருமூலரின் திருமந்திரமாகும். சுந்தரநாதர் எனும் இயற்பெயர் கொண்ட திருமூலர் பாண்டி நாட்டிலே கி.மு 6000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தாக குறிப்பிடப்படுகிறது.[1] பின்னர் அவர் திருவாவடுதுறையில் மூவாயிரமாண்டுகள் (3000) யோக நிஸ்டையில் ஆழ்ந்து ஆண்டுக்கு

முதுதத்துவமாணி ஆய்வாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.